**செய்தி வெளியீடு எண்: 897** **நாள்: 11.12.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 10.12.2018 அன்று தலைமைச் செயலகத்தில், பதிவுத்துறை சார்பில் ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான ''ஸ்டார் 2.0'' திட்டத்தின் கீழ், விரைவுக் குறியீடு (QR code), சார்பதிவாளரின் இலக்கச் சான்றொப்பமிட்ட வில்லங்கச் சான்று மற்றும் சான்றிட்ட ஆவண நகல் வழங்குதல், ஒற்றைச்சாளர முறையில் இந்திய நிதியமைப்புக்குட்பட்ட அனைத்து வங்கிகள் மற்றும் அங்கீரிக்கப்பட்ட பணப்பரிவர்த்தனை முறைகளில் பதிவுத்துறைக்கான கட்டணங்களை செலுத்துதல், ஆவணப் பதிவு முடிவடைந்தவுடன் ஒளிவருடல் செய்யப்பட்ட ஆவண பிம்பங்களை ஆவணதாரரின் மின்னஞ்சலுக்கு அனுப்புதல் ஆகிய புதிய திட்டங்களை துவக்கி வைத்து, சீட்டுப்பதிவு, சங்கப்பதிவு, கூட்டாண்மை நிறுவனப்பதிவு, அனைத்து வகையான திருமணங்கள் பதிவு, பிறப்பு, இறப்பு சான்றுகள் வழங்குதல் ஆகிய அனைத்து சேவைகளும் கணினிமயமாக்கப்பட்டு ஸ்டார் 2.0 மென்பொருளுடன் ஒன்றிணைக்கப்பட்டு இணையவழி வாயிலாக வழங்கும் சேவையை துவக்கி வைத்தார்கள். மேலும், 2 கோடியே 19 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருப்பனந்தாள், படப்பை மற்றும் உறையூர் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

பதிவுத்துறையில் மின்னணு ஆளுமை முறைகளை விரிவாக்குவதன் மூலம் பொதுமக்களுக்கான சேவையின் தரம் உயர்வதோடு வெளிப்படைத்தன்மையும் அதிகரிக்கும் என்பதால், அலுவலகத்திற்குச் சென்று வில்லங்கச் சான்று மற்றும் சான்றிட்ட ஆவண நகல் பெறும் தற்போதைய நடைமுறைக்கு மாற்றாக, ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான ''ஸ்டார் 2.0'' திட்டத்தின் கீழ், பதிவுத்துறையில் வீட்டிலிருந்தபடியே இணையதளம் வழியாக விண்ணப்பித்து அதற்கான கட்டணத்தை இணையதளம் வழியாகவே செலுத்தி விரைவுக் குறியீடு (QR code) மற்றும் சம்பந்தப்பட்ட சார்பதிவாளரின் இலக்கச் சான்றொப்பமிட்ட வில்லங்கச் சான்று மற்றும் சான்றிட்ட ஆவண நகலை தரவிறக்கம் செய்து கொள்ளும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மேலும், அச்சான்றிதழில் அச்சிடப்பட்டிருக்கும் விரைவுக் குறியீட்டை ஒளிவருடல் செய்தால் சான்றிதழின் நகலினை மையக் கணினியிலிருந்து பார்வையிடலாம். இம்முறையில் சான்றிதழின் உண்மைத் தன்மையை எவரும் அறிந்து

கொள்ளலாம். இந்த சான்றிதழ்கள், பதிவு விதிகள் படி வழங்கப்படுவதால் உரிய சட்ட அங்கீகாரமும் பெற்றுள்ளது. இந்த புதிய வசதியால், பொதுமக்கள் வில்லங்கச் சான்று மற்றும் சான்றொப்பமிட்ட ஆவண நகல் பெற சார்பதிவாளர் அலுவலகம் செல்லும் நிலை அறவே தவிர்க்கப்படும்.

தற்போது நடைமுறையில் உள்ள பதிவுத்துறைக்கான கட்டணங்களை 11 வங்கிகளின் இணையவழி மூலம் பணம் செலுத்தும் முறைக்கு மாற்றாக, இந்திய நிதியமைப்புக்குட்பட்ட அனைத்து வங்கிகள் மற்றும் அங்கீரிக்கப்பட்ட அனைத்து பணப் பரிவர்த்தனை முறைகளிலும் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியை ஒருங்கிணைப்பாளராக கொண்ட புதிய இணையவழி கட்டணம் செலுத்தும் முறையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். இப்புதிய முறையினால் 58 வங்கிகளின் வழியே இணைய வங்கி சேவை (Net Banking), பற்று அட்டை (Debit card), கடன் அட்டை (Credit card), மற்றும் ஒருங்கிணைந்த கட்டண முகப்பு (UPI Payment) ஆகிய அனைத்து வழிகளிலும் பதிவுத்துறைக்கான கட்டணத்தை பொதுமக்கள் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பதிவுப் பணிகள் நிறைவடைந்து ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒளிவருடல் செய்யப்பட்டவுடன், அந்த ஆவணத்தை சம்பந்தப்பட்ட ஆவணதாரர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பும் புதிய வசதியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள். இப்புதிய வசதியினால் பொதுமக்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை திரும்ப பெற்றுச் செல்ல தாமதமாகும் தருணங்களில் ஒளிவருடல் செய்யப்பட்டு தங்கள் மின்னஞ்சல் முகவரியில் பெறப்பட்ட ஆவண பிம்பங்களை தங்களின் உடனடி தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும், சீட்டுப் பதிவு மற்றும் சங்கப் பதிவுக்கான மென்பொருள் மேம்படுத்தப்பட்டு ஸ்டார் 2.0 மென்பொருளுடன் இணைக்கப்பட்டுள்ளது. கூட்டாண்மை நிறுவனப் பதிவுக்கு புதிதாக மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இணையதளம் மூலம் விண்ணப்பித்து இலக்கச் சான்றொப்பமிட்ட அனைத்து நகல்களையும் இணைய வழியாக பெற்றுக் கொள்ளும் வசதி, பதிவுற்ற சீட்டுக்கள், சங்கங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றின் விவரங்களை இணைய வழியாக பார்வையிடும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இந்து திருமணப் பதிவு சட்டம், தமிழ்நாடு திருமணப் பதிவுச் சட்டம், தனி திருமணப் பதிவுச் சட்டம், கிறிஸ்துவ திருமணப் பதிவுச் சட்டம், பிறப்பு, இறப்பு சான்று வழங்குவதற்கான புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டு, ஸ்டார் 2.0 மென்பொருளுடன்

இணைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், இணையதளம் மூலம் விண்ணப்பித்து இலக்கச் சான்றொப்பமிட்ட அனைத்து சான்றிதழ்களையும் இணைய வழியாக பெற்றுக் கொள்ளும் வசதி, பதிவுற்ற திருமணங்கள், பிறப்பு மற்றும் இறப்பு விவரங்களை இணைய வழியாக பார்வையிடும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாரம்பரியமிக்க துறையான பதிவுத் துறை அலுவலகங்கள் அனைத்தும் தனியார் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசுக் கட்டடங்களில் இயங்கி வருவதைக் கருத்திற்கொண்டு, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 7.8.2014 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாளில் 57 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம், காஞ்சிபுரம் மாவட்டம் – படப்பை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – உறையூர் ஆகிய இடங்களில் தலா 80 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி, மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பா. பெஞ்ஜமின், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வணிகவரி மற்றும் பதிவுத்துறை முதன்மைச் செயலாளர் திரு.கா.பாலச்சந்திரன், இ.ஆ.ப., பதிவுத்துறைத் தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 11.12.2018.**